**IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.**

**S.C.No.138/2013**

Date: 29.02.2024.

**PW–34: டாக்டர்.பானுமதி**

சாட்சி இன்று மீண்டும் சி.எம்.பி.எண்.409/2024 மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்பேரில் திரும்ப அழைக்கப்பட்டு முதல்விசாரணை தொடர்ச்சி

**A1 to A3, A5, A6, A7, A9, A13 to A17 present. A8, A11 & A18 called absent. Petition u.sec.317 Cr.P.C filed and allowed.**

**முதல்விசாரணை தொடர்ச்சி**

நான் கடந்த 16.05.2008 அன்று ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையில் அரசு உதவி மருத்துவராக பணிபுரிந்தபோது பிற்பகல் 1.00 மணியளவில் ஜானகி, க/பெ.காசிநாதன் என்பவரை அவரது தங்கை சரோஜா என்பவர் சிகிச்சைக்காக கொண்டுவந்தார். நோயாளியை நான் பரிசோதித்தேன். அவர் சுயநினைவுடன் மற்றும் பேசும் தன்மையுடன் காணப்பட்டார். நோயாளியை நான் விசாரித்தபோது அவர் தன்னை 35 நபர்கள் கூரிய ஆயுதங்களால் அன்றைய தினம் பகல் 11.00 மணியளவில் வங்குடி கிராமத்திலுள்ள அவரது இல்லத்தில் வைத்து தான் தாக்கப்பட்டதாக தெரிவித்தார்.

அவரை நான் பரிசோதித்தபோது அவரது உடலில் கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டது.

1. இடது புற முகத்தில் ஒரு சிதைந்த காயம் 5x2.5x2 cm அளவில் காணப்பட்டது.

2. இடது கையில் ஒரு சிதைந்த காயம் 3x1.5x1 cm அளவில் காணப்பட்டது.

3. இடதுபுற தோள்பட்டையின் பின்புறத்தில் இரண்டு காயங்கள் 7x2.5x3 cm அளவில் காணப்பட்டது.

4. வலது புற கையில் ஒரு சிதைந்த காயம் 2x1.5x2.5 cm அளவில் காணப்பட்டது.

5. இடது மேல்கையில்(புஜம்)உள்ள எலும்பானது முறிவடைந்த நிலையில் காணப்பட்டது. அதன் காரணமாக இடது கை வீக்கத்துடன் காணப்பட்டது.

6. இடது தோள்பட்டையின் பின்புறம் எலும்பு முறிவு காணப்பட்டது.

மேற்படி நோயாளிக்கு முதலுதவி சிகிச்சை அளித்து அவரை மேல்சிகிச்சைக்காக

தஞ்சாவூர் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். அந்த மருத்துவமனையில் மேற்படி நோயாளிக்கு நுண்கதிர்படம் எடுக்கப்பட்டுள்ளது. அப்பரிசோதனையின் மூலம் நோயாளியின் இடதுகாரை எலும்பு முறிவடைந்திருந்தும், இடது கையில் எலும்பு முறிவடைந்திருந்ததும், வலது கையில் ஒரு எலும்பு முறிவடைந்திருந்ததும் கண்டறியப்பட்டது. நோயாளியின் மண்டையோட்டில் எந்த எலும்பு முறிவும் கண்டறியப்படவில்லை.

தஞ்சாவூர் அரசு மருத்துவமனை மருத்துவர் வழங்கிய அ.சா.ஆ.38 ஆவணத்தின் அடிப்படையில் நான் மேலே சொன்ன 2 முதல் 5 வரையிலான காயங்கள் கொடுங்காயங்கள் என்று கருத்து தெரிவித்து நான் சான்றளித்திருக்கிறேன். அச்சான்றானது என்னால் மேற்படி நோயாளியை பொறுத்து பதிவு செய்யப்பட்ட விபத்து பதிவேட்டின் பின்புறம் எழுதப்பட்டுள்ளது. என்னால் பதிவு செய்யப்பட்ட விபத்து பதிவேட்டு நகல் மற்றும் அதன் பின்புறம் எழுதப்பட்டுள்ள காயசான்று ஆகியவை அ.சா.ஆ.51.

மேற்படி நோயாளிக்கு ஏற்பட்ட காயங்களானது தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் ஆயுதங்களால் தாக்கினால் ஏற்படுவதற்கு வாய்ப்புண்டு. இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>1, 2, 5, 7, 9, 11, 14 முதல் 18 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

விபத்து பதிவேட்டு நகலானது என்னால் 16.05.2008 அன்று பதிவு செய்யப்பட்டு கையொப்பம் செய்யப்பட்டது என்றால் சரிதான். விபத்து பதிவேட்டு நகலில் நோயாளி ஜானகி என்பவர் வங்குடி கிராமம், மேலத்தெருவில் வசிப்பதாக பதிவு செய்திருக்கிறேன் என்றால் சரிதான். நோயாளி ஜானகிக்கு ஏற்பட்ட காயங்களானது எந்தவிதமான ஆயுதங்களால் தாக்கினால் ஏற்படுவதற்கு வாய்ப்புண்டு என்று நான் போலிசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன்.

மேற்படி விபத்து பதிவேட்டு நகலில் பின்புறம் எழுதப்பட்டுள்ள காயச்சான்றுக்கு கீழே உள்ள எனது கையொப்பத்திற்கு கீழே தேதியானது 12.06.2008 என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அக் கையொப்பமானது தான் காயச்சான்று வழங்கியபோது போட்டது என்று சாட்சி சுயமாக கூறுகிறார்.

16.05.2008 அன்று நான் விபத்து பதிவேட்டு நகலில் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் கையொப்பம் செய்திருக்கிறேன். 12.06.2008 அன்று ஆய்வாளர் என்னை விசாரித்தபோது அ.சா.ஆ.38 ஆவணத்தை காட்டி என்னை விசாரித்தாரா என்றால் ஆமாம். அ.சா.ஆ.51 மற்றும் அ.சா.ஆ.38 ஆகிய ஆவணங்களை காண்பித்து ஆய்வாளர் என்னை எப்போதும் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

அ.சா.ஆ.51 ஆவணத்தை பொறுத்து ஆய்வாளர் என்னை எப்போதும் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

<u>8–ஆம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் ஆயுதங்களை கொ'ண்டு நோயாளி ஜானகி என்பவருக்கு ஏற்பட்டதாக சொல்லப்படும் காயங்களை ஏற்படுத்த முடியாது என்றால் சரியல்ல. அந்த ஆயுதங்களை கொண்டு வெட்டும்போது ஒழுங்கான விளிம்புடைய காயங்கள் தான் ஏற்படும் என்றாலும், சிதைந்த காயங்கள் ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை என்றாலும் சரியல்ல. நான் தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**3 மற்றும் 6 எதிரிகள் தரப்பில் மேற்கண்ட குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.**

**13 ஆம் எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜரில்லை. எனவே 13 ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது**.

**மறுவிசாரணை இல்லை.**

Sd/– G. Sri Rama Jeyam,
III Additional District Judge,
Salem.